**.நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**முன்னிலை: திருமதி.E.வெர்ஜின் வெஸ்டா, B.A.,M..L..,M.B.A.**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்**
**இராமநாதபுரம்.**

சுபகிருது வருடம் ஆனி மாதம் 13 ம் நாள் புதன்கிழமை
2023 ம் ஆண்டு ஜீன் திங்கள் 28 ம் நாள் புதன்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.117/2022
CNR.No:TNRM120002792022

| | | |
|---|---|---|
| 1 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண். | அரசுக்காக,<br>காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள்,<br>திருஉத்திரகோசமங்கை காவல் நிலையம்,<br>இராமநாதபுரம்.<br>குற்ற எண்.109/2021 |
| 2 | எதிரிகளின் பெயர் | A1. அழகுராமர், வயது (30/2023)<br>த/பெ.முனியசாமி,<br>கோடரேந்தல்,<br>இராமநாதபுரம்.<br><br>A2. சத்தியசீலன், வயது (24/2023)<br>த/பெ.கணேசன்,<br>இந்திரா நகர்,<br>திருஉத்திரகோசமங்கை,<br>கீழக்கரை,<br>இராமநாதபுரம்.<br><br>A3. சுப்பிரமணியன், வயது (50/2023)<br>த/பெ.நாகு,<br>இந்திரா நகர்,<br>திருஉத்திரகோசமங்கை,<br>கீழக்கரை,<br>இராமநாதபுரம்.<br><br>A4. லதா, வயது (24/2023)<br>க/பெ.சதீஷ்குமார்,<br>இந்திரா நகர், |

திருஉத்திரகோசமங்கை,
கீழக்கரை,
இராமநாதபுரம்.

A5. நந்தினி, வயது (26/2023)
க/பெ.அழகுராமர்,
இந்திரா நகர்,
திருஉத்திரகோசமங்கை,
கீழக்கரை,
இராமநாதபுரம்.

A6. வீரமுத்து, வயது (57/2023)
த/பெ.கந்தன்,
இந்திரா நகர்,
திருஉத்திரகோசமங்கை,
கீழக்கரை,
இராமநாதபுரம்.

A7. முனீஸ்வரி, வயது (48/2023)
க/பெ.சுப்பிரமணியன்,
இந்திரா நகர்,
திருஉத்திரகோசமங்கை,
கீழக்கரை,
இராமநாதபுரம்.

| | | |
|---|---|---|
| 3 | சம்பவ நாள் | 23.12.2021 |
| 4 | புகார் தேதி | 24.12.2021 |
| 5 | கைது செய்யப்பட்ட தேதி | 1, 2 எதிரிகள் – 25.12.2021<br>4, 5, 7 எதிரிகள் – 19.04.2022 |
| 6 | பிணையில் வெளிவந்த தேதி | 1, 2 எதிரிகள் – 08.02.2022<br>4, 5, 7 எதிரிகள் – 19.04.2022 காவல்நிலைய பிணை<br>3, 6 எதிரிகள் – 25.01.2022 முன்பிணை |
| 7 | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 12.09.2022 |

| | | |
|---|---|---|
| 8 | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 27.06.2023 |
| 9 | எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு | |
| | 1 வது குற்றச்சாட்டு | 1 முதல் 7 எதிரிகள் அனைவரும் கலகம்விளைவிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்ட குற்றத்திற்காக பிரிவு 147 இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 2 வது குற்றச்சாட்டு | 1 முதல் 7 எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி அபாயகரமான ஆயுதத்தை வைத்து புகார்தாரர், புகார்தாரரின் கணவர் மற்றும் அவரது மகள் ஆகியோரை தாக்கி கலகம் விளைவிக்கக்கூடிய வகையில் நடந்துகொண்ட குற்றத்திற்காக பிரிவு 148 இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 3 வது குற்றச்சாட்டு | 1 முதல் 7 எதிரிகள் புகார்தாரர் மற்றும் அவரது மகளையும் பெண்கள் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து ஏன்டி தேவிடியா மகள் என் மாமாவுடன் எதுக்குடி சண்டை போடுறிய என்று அசிங்கமாக பேசியக் குற்றத்திற்காக பிரிவு 294(b) இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 4 வது குற்றச்சாட்டு | 1 வது எதிரி புகார்தாரரின் மகளின் சேலையை பிடித்து இழுத்து கையால் அடித்தும், 2 வது எதிரி கம்பால் புகார்தாரரின் கணவரை தலையில் அடித்து இரத்தக்காயத்தையும், 3 முதல் 7 எதிரிகள் புகார்தாரர் மற்றும் அவரது மகளையும் தலைமுடியை பிடித்து இழுத்து கையல் அடித்து கீழே தள்ளிவிட்டு காலால் மிதித்தக் |

| | | |
|---|---|---|
| | | குற்றத்திற்காக 1 மற்றும் 2வது எதிரிகள் மீது பிரிவு 323 இதச–வின் கீழும், 3 முதல் 7 எதிரிகள் மீது பிரிவு 323(2counts) இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 5 வது குற்றச்சாட்டு | 1 முதல் 7 எதிரிகள் புகார்தாரர், புகார்தாரரின் கணவர் மற்றும் புகார்தாரரின் மகள் ஆகியோரை பார்த்து ஒழுங்கா இருங்க இல்லைன்னா உங்களை வெட்டிக்கொன்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தக் குற்றத்திற்காக பிரிவு 506(2) இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 6 வது குற்றச்சாட்டு | 1வது எதிரி உருட்டுக்கட்டையால் புகார்தாரரின் தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தியக் குற்றத்திற்காக பிரிவு 324 இதச–வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| | 7 வது குற்றச்சாட்டு | 1, 2, 3, 6 எதிரிகள் புகார்தாரரையும் அவரது மகளையும் பெண்கள் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி தொல்லை கொடுத்தக் குற்றத்திற்காக பிரிவு 4 பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| 10 | எதிரிகளின் பதிலுரை | குற்றவாளியில்லை |
| 11 | நீதிபதியின் முடிவு | குற்றவாளியில்லை |
| 12 | நீதிபதியின் ஆணை | சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 506(ii) இதச |

மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 3, 6 எதிரிகள் 147, 148, 294(b), 323(2counts), 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 4, 5, 7 எதிரிகள் 147, 148, 294(b), 323(2counts), 506(ii) இதச இதச–வின் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து 1 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

1, 2. 3. 6 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் இல்லை. எனவே அது குறித்து உத்தரவு இல்லை.

| | | |
|---|---|---|
| 13 | எதிரிகளின் வழக்கறிஞர் | திரு.A.இராமலிங்கம் |
| 14 | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.G. இளங்கோ |

இந்த வழக்கு 03.08.2022 ம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 27.06.2023 ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசுக்காக குற்றம் முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திரு.G. இளங்கோ அவர்கள் ஆஜராகியும், இந்த வழக்கின் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு..A.இராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

## 1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்

இவ்வழக்கில், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 23.12.2021ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில், 1வது எதிரி உருட்டுக்கட்டையுடனும், 2வது எதிரி கம்புடனும் சம்பவ இடத்தில் வைத்து புகார்தாரரையும் அவரது மகளையும் பெண்கள் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து ஏன்டி தேவிடியா மகளே என் மாமாவுடன் எதுக்குடி சண்டை போடுறிய என்று அசிங்கமாக பேசி, மேற்படி 1வது எதிரி உருட்டுக்கட்டையால் புகார்தாரரின் தலையில் அடித்து இரத்தக்காயத்தையும், புகார்தாரரின் மகளின் சேலையை பிடித்து இழுத்து கையால் அடித்தும், 2வது எதிரி கம்பால் புகார்தாரரின் கணவரை தலையில் அடித்து இரத்தக்காயத்தையும், 3 முதல் 7 எதிரிகள் புகார்தாரர் மற்றும் அவரது மகளையும் பெண்கள் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு காலால் மிதித்தும், புகார்தாரர், புகார்தாரரின் கணவர் மற்றும் புகார்தாரின் மகள் ஆகியோரை பார்த்து தேவிடியா மக்களா ஒழுங்கா இருங்க இல்லைன்னா உங்களை வெட்டிக்கொண்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தக் குற்றத்திற்காக 1வது எதிரி மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 324, 323, 506(2) IPC and 4 of TNPWH Act–ன் கீழும், 2, 3, 6 வது எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) IPC and 4 of TNPWH Act–ன் கீழும், 4, 5, 7 வது எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(2) IPC –ன் கீழ் கேணிக்கரை காவல்நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளாரே? உங்களது முகாந்திரம் என்ன? அவர்கள் பிரிவு 173(2)–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்கு ஆவண நகல் வழங்கல், எதிரிகளிடம் விசாரணை...**

வழக்கு கோப்பில் ஏற்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. காவல் அறிக்கையும், பிரிவு 173 குவிமுச ன் படி அனுப்பப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரிலும் இந்நீதிமன்றம் "விசாரணை செய்வதற்கு தகுதியுள்ளதும், போதிய தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தை எதிரிகள் செய்திருக்கிறார்கள் என அனுமானிப்பதற்கு ஆவணங்களில் போதிய ஆதாரம் உள்ளது" என இந்நீதிமன்றம் கருதி போதிய கால அவகாசம் அளித்து, 1வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 3, 6 எதிரிகள் 147, 148, 294(பி), 323(2counts), 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 4, 5, 7 எதிரிகள் 147, 148, 294(பி), 323(2counts), 506(ii) இதச இதச–வின் கீழ் குற்றத்தின் விபரங்கள் பற்றி விளக்கிக்கூறி, குற்றச்சாட்டு வனைந்து குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்கிறீரா எதிர்வாதம் செய்யப்போகிறீரா? எனக் கேட்டபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சியத்திற்கு என வகை செய்யப்பட்டது.

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4. அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு:–**

i) அ.சா.1 முத்துவள்ளி தனது சாட்சியத்தில், 2, 3 வருடங்களுக்கு முன்பு தெருவில் சண்டை நடப்பதாக கேள்விபட்டு வேகமாக ஓடியபோது, இரவு நேரம்

என்பதால் தடுமாறி கீழே விழுந்ததால், தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், தானும் தனது கணவரும் உத்திரகோசமங்கை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துவிட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தபோது, போலீசார் தன்னிடம் கையெழுத்து வாங்கியதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 ஆனந்தி தனது சாட்சியத்தில், 2, 3 வருடங்களுக்கு முன்பு தெருவில் சண்டை நடப்பதாக கேள்விபட்டு வேகமாக தனது அம்மா ஓடியதில், அவர் தவறி கீழே விழுந்துவிழுந்ததாகவும், அவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தபோது, போலீசார் தனது அம்மாவிடமும், தன்னிடமும் வெள்ளைபேப்பரில் கையெழுத்து வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும்,அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 என்றும், அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா.3 முத்துராமன் தனது சாட்சியத்தில், 2, 3 வருடங்களுக்கு முன்பு தெருவில் சண்டை நடப்பதாக கேள்விபட்டு தான் வேகமாக ஓடியபோது, தவறி கீழே விழுந்துவிட்டதாகவும், அவரை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்ற கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.4 ரமேஷ்குமார் தனது சாட்சியத்தில், 2,3 வருடங்களுக்கு முன்பு காலையில் தான் இராமநாதபுரம் வந்து கொண்டிருந்தபோது, தங்கள் ஊர் அருகே வரும்போது போலிசார் தன்னிடம் ஒரு வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து வாங்கியதாகவும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 என்றும், வழக்குப்பற்றி வேறு விவரம் எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

v) அ.சா.5 திரு.M.கிருஷ்ணமூர்த்தி தனது சாட்சியத்தில், தான் தற்போது உத்திரகோசமங்கை காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், உத்திரகோசமங்கை காவல்நிலைய குற்ற எண். 109/2021 U/s. 147, 148, 294(b), 323, 324, 506(2) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர், திரு. முத்துராமன் தற்போது பணிமாறுதலாகி மாவட்ட குற்றப்பதிவேடு கூடத்திலும் மற்றும் புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு. தெய்வேந்திரன் அவர்கள் தற்போது வாலிநோக்கம் காவல்நிலையத்தில் அயல்பணியில் வேலை செய்து வருவதாகவும், அவர்களது கையொப்பம் தனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 24.12.2021 ம் தேதி 08.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு. முத்துராமன் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப்பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா1 முத்துவள்ளி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப்பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 109/2021 U/s. 147, 148, 294(b), 323, 324, 506(2) IPC & 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், வாதியின் புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்ததாகவும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், வாதியின் புகார் அ.சா.ஆ.5 என்றும், பின்பு வழக்கை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரமேஷ்குமார் மற்றும் கருணாநிதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 என்றும், அன்றைய தினமே சாட்சிகள் முத்துவள்ளி, ஆனந்த், முத்துராமன், ஆனந்தி, ராஜேந்திரன், வேதநாயகி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அசா1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. சாந்தினி அவர்களை விசாரித்து விபத்துப்பதிவேடு பெற்றதாகவும், அ.சா.1 ன் விபத்துப்பதிவேடு அ.சா.ஆ.8 என்றும், பின்பு வழக்கு கோப்புகளை சார்பு ஆய்வாளர் திரு. தெய்வேந்திரன் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். பின்பு விசாரணை அதிகாரி தனது விசாரணையை முடித்து அதே பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சியங்களின் வாக்குமூலங்களில் எதிரிகளுக்கு எதிராக தோன்றும் விபரங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313 (1)(ஆ) ன் கீழ் கேள்வி கேட்டபோது பொய் சாட்சி என்று எதிரிகள் மறுத்துவிட்டார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறினார்கள்.

**<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை..</u>**

**6.** எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயத்திற்கிடமின்றி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு..</u>**

**7.** அரசு தரப்பில் வாதுரைத்த கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கு சம்பவத்தில் எதிரிகள் ஈடுபட்டுள்ளார்கள். எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை

நிரூபிப்பதற்காக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதுரைத்தார்.

**8.** எதிரிகள் தரப்பில் வாதுரைத்த கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர் என்றும், காவல் துறை சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. எனவே எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை வழங்கி விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**9.** இவ்வழக்கில் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், 1 முதல் 7 எதிரிகள் புகார்தாரர் மற்றும் அவரது மகளையும் பெண்கள் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி தலைமுடியை பிடித்து இழுத்து கையால் அடித்து கீழே தள்ளிவிட்டு காலால் மிதித்தும், புகார்தாரர், புகார்தாரரின் கணவர் மற்றும் புகார்தாாரின் மகள் ஆகியோரை பார்த்து தேவிடியா மக்களா ஒழுங்கா இருங்க இல்லைன்னா உங்களை வெட்டிக்கொண்று விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தாக தொடரப்பட்ட இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**10.** அரசு தரப்பில் முதன்மை சாட்சியாக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் அ.சா.1, எதிரிகள் தன்னையும், தனது கணவர் மற்றும் மகளையும் அசிங்கமாக பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்தது தொடர்பாக புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.5

மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ல் சொல்லப்பட்ட சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்காமல், தெருவில் சண்டை நடப்பதாக கேள்விப்பட்டு வேகமாக ஓடியபோது தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் தன்னிடம் கையொப்பம் வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும், வழக்குப்பற்றி தனக்கு எந்த விவரமும் தெரியாது என்று கூறி அரசு வழக்கிற்கு முரண்பட்டு அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரிகளுடன் தான் ராசியாகிவிட்டதாகச் சொல்லி எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் தான் கையொப்பம் செய்ததாகவும், குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார். ஆனால் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

**11.** சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக பட்டியலில் சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 பிறழ் சாட்சியாக மாறி அ.சா.1 நின் சாட்சியத்தை ஒத்துரைத்தே சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் அவர்கள் வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பிற்க்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**12.** பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், வழக்கு பற்றி தனக்கு வேறு விவரம் எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில், அவர்களின் சாட்சியம் இவ்வழக்கில் முக்கியம் வாய்ந்ததாக அமையவில்லை.

**13.** அரசு தரப்பு முதன்மை சாட்சிகள், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கில் இதர பட்டியல் சாட்சிகளை அரசு தரப்பு விசாரிக்காமல் இந்நீதிமன்ற அனுமதியுடன் நீக்கரவு செய்துள்ளது. இந்த நிலையில் அரசு தரப்பு சாட்சிகளின் பிறழ் சாட்சியங்களை வைத்து எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**14.** அ.சா.5, திரு. M.கிருஷ்ணமூர்த்தி, இவ்வழக்கை பதிவு செய்த விசாரணை அதிகாரி திரு.முத்துராமன் மற்றும் மேல்விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு.தெய்வேந்திரன் அவர்கள் இவ்வழக்கை புலன் விசாரணை செய்ததை குறித்து, ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்ற முன் அனுமதியுடன் கூடுதல் சாட்சியாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.5 தனது சாட்சியத்தில் விசாரணை அதிகாரி, அ.சா.1 ன் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரித்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2, அ.சா.3 மற்றும் பார்வை மகஜர் சாட்சி அ.சா.4 ஆகியோர் பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையிலும், அ.சா.5 விசாரணை அதிகாரி இவ்வழக்கில் புலன் விசாரணை செய்தது குறித்து மட்டும் சாட்சியம் அளித்திருந்த நிலையில் அவரின் சாட்சியத்தைக் கொண்டு சம்பவம் நடைபெற்றுள்ளது என்றும், அது குறித்து அவர் விசாரணை செய்துள்ளார் என்றும் மட்டுமே உறுதிப்படுத்த இயலும் என்பதாலும், எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதற்கு தெளிவான

சாட்சியம் எதுவும் அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே சந்தேகத்தின் பலன் எதிரிகளுக்கு உரியதாகிறது.

**16.** இந்த நிலையில் மேற்கண்ட விவாதங்களை பரிசீலிக்கையில் இந்த வழக்கு எதிரிகள் மீதான மேற்கண்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி போதுமான சாட்சிய சான்றாவணங்களை கொண்டு நிரூபணம் செய்ய தவறியுள்ளது என முடிவுக்கு வந்து சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு வழங்கி இந்நீதிமன்றம் விடுதலை செய்கிறது.

**17.** **<u>முடிவாக:</u>** சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, 1வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324, 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 3, 6 எதிரிகள் 147, 148, 294(பி), 323(2counts), 506(ii) இதச மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும், 4, 5, 7 எதிரிகள் 147, 148, 294(பி), 323(2counts), 506(ii) இதச–வின் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து 1 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

1, 2, 3, 6 எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணைமுறி மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் இல்லை. எனவே அது குறித்து உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட

பின்னர் 2023ம் ஆண்டு ஜீன் திங்கள் 28ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.28 16:19:08 +0530

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

1)அ.சா.1 – முத்துவள்ளி

2)அ.சா.2 – ஆனந்தி

3)அ.சா.3 – முத்துராமன்

4)அ.சா.4 – ரமேஷ்குமார்

5)அ.சா.5 – M.கிருஷ்ணமூர்த்தி (சார்பு ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

1)அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

2)அ.சா.ஆ.2 – புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம்

3)அ.சா.ஆ.3 – பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம்

4)அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

5)அ.சா.ஆ.5 – புகார் வாக்குமூலம்

6)அ.சா.ஆ.6 – பார்வை மகஜர்

7)அ.சா.ஆ.7 – மாதிரி வரைபடம்

8)அ.சா.ஆ.8 – அ.சா.1ன் விபத்துப்பதிவேடு

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்;:-</u>** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள்**;:–

இல்லை

**குறிப்பு :–**

1) 1, 2 எதிரிகள் வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.

2) சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை

3) தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.06.28 16:19:19 +0530